*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-4 (**LW**-4)*

*Name / Father's Name:* ***திருமதி.பாப்பாயி க/பெ.கோவிந்தன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.09.2023.*

துவக்க நேரம் 12.29

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறை சின்னமாங்கோட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது உறவினர்கள்தான். கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை 04.00 மணியளவில் எனது மகன் ஈஸ்வரன் காட்டில் வேலை செய்துகொண்டிருந்தபோது, எதிரிகள் அங்கு வந்து உங்களுக்கு நிலம் இல்லை என்று சொல்லி எனது மகனை அடித்தார்கள்.

2) நானும், எனது மகனுடன் காட்டில்தான் இருந்தேன். சண்டையை விலக்க முடியவில்லை, அதனால் எனது மகனை வீட்டிற்குள் கூட்டிவந்துவிட்டேன். எதிரிகள் தடி, கல் ஆகியவற்றை வைத்து எனது வீட்டினை அடித்து மேற்கூரையை பிரித்துவிட்டார்கள். எனது மற்றொரு மகன் லட்சுமணன் கோவிலுக்கு சென்றுவிட்டு, திரும்ப வீட்டிற்கு வந்தபோது, எதிரி சடையன் அவரை அடித்து, அவரது காதினை கிழித்துவிட்டார்.

3) எனது மகன்களை அழைத்துக்கொண்டு கருமந்துறை காவல் நிலையத்திற்கு வந்தேன். பிறகு ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம். போலிசார், நடந்த சம்பவம் பற்றி என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எங்கள் வீடு சின்னமாங்கோடு கிராமத்தில் ஊருக்குள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் வீட்டில்தான் இருந்தேன் என்றால் சரியல்ல,

எங்கள் காட்டில் தான் இருந்தேன். சண்டை போடும் சத்தம் கேட்டு தான் நான் சம்பவயிடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். 5 நிமிடம் கழித்து அங்கு வந்திருப்பேன்.

2) எனது கணவரும், எதிரி சடையனும் அண்ணன், தம்பி என்றால் சரிதான். எங்களுக்கும், எதிரிகளுக்குமிடையே சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிவில் வழக்கில் எதிரிகளின் அனுபவத்திற்கு நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) சம்பவ தினத்தில் இவ்வழக்கின் எதிரிகளை எனது கணவர் மற்றும் மகன்கள் அடித்துவிட்டதாக சொல்லி அவர்கள் மீதும் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பொய் வழக்கு ஆகும். நடந்த சம்பவம் பற்றி என்னிடம், போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

4) நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் எதிரிகள், எங்கள் வீட்டினை உடைக்கவில்லை என்றும், எனது மகன்களை அடிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி சிவில் வழக்கில் எங்களுக்கு ஆதரவாக உத்தரவு பெறவேண்டி நடக்காத சம்பவத்தினை சொல்லி எதிரிகள்மீது பொய்யான வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

முடிவு நேரம் 12.46

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-5 (**LW**-6)*

*Name / Father's Name: **திருமதி.வனிதா க/பெ.பாஸ்கர்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.09.2023.*

துவக்க நேரம் 12.47

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறை சின்னமாங்கோட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஈஸ்வரன் மற்றும் அவரது குடும்பத்தார்களை தெரியும். அவர்கள் இருதரப்பினரும் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை நேரத்தில், நானும், எனது கணவரும் எங்களது காட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, எதிரிகள் மற்றும் புகார்தாரர் தரப்பினர்களுக்கு இடையே சண்டை போட்டுக்கொண்டதாக சொன்னார்கள். நாங்கள் பார்த்தபோது சண்டை நடந்து முடிந்திருந்தது. போலிசார், நடந்த சம்பவம் பற்றி என்னை விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் மற்றும் நன்கு பழக்கமுடையவர்கள் என்று சொன்னால் சரிதான். கடந்த 28.01.2021 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் சேர்ந்து, ஈஸ்வரன், லட்சுமணன் ஆகியோர்கள் அவர்களது காட்டில் பால் கறந்து கொண்டிருந்தபோது, அங்கு

சென்று கெட்ட வார்த்தையால் திட்டி, அவர்களை அடித்ததாகவும், ஈஸ்வரனின் வீட்டின் ஓட்டை அடித்து உடைத்துவிட்டதாகவும், மேலும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

2) நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் மற்றும் நன்கு பழக்கம் உடையவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.59

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.328/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-6 (**LW**-7)*

*Name / Father's Name: **திரு.பாஸ்கர் த/பெ.சடையன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.09.2023.*

துவக்க நேரம் 01.00

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கருமந்துறை சின்னமாங்கோட்டில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஈஸ்வரன் மற்றும் அவரது குடும்பத்தார்களை தெரியும். அவர்கள் இருதரப்பினரும் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை. ஒருநாள் மாலை நேரத்தில், நானும், எனது மனைவியும் எங்களது காட்டிற்கு சென்றுகொண்டிருந்தபோது, எதிரிகள் மற்றும் புகார்தாரர் தரப்பினர்களுக்கு இடையே சண்டை போட்டுக்கொண்டதாக சொன்னார்கள். நாங்கள் பார்த்தபோது சண்டை நடந்து முடிந்திருந்தது. போலிசார், நடந்த சம்பவம் பற்றி என்னை விசாரித்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலிசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் மற்றும் நன்கு பழக்கமுடையவர்கள் என்று சொன்னால் சரிதான். கடந்த 28.01.2021 ஆம் தேதி மாலை 04.00 மணியளவில் ஆஜர் எதிரிகள் சேர்ந்து, ஈஸ்வரன், லட்சுமணன் ஆகியோர்கள் அவர்களது காட்டில் பால் கறந்து கொண்டிருந்தபோது, அங்கு

சென்று கெட்ட வார்த்தையால் திட்டி, அவர்களை அடித்ததாகவும், ஈஸ்வரனின் வீட்டின் ஓட்டை அடித்து உடைத்துவிட்டதாகவும், மேலும் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

2) நடந்த சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து காட்டுக்காரர்கள் மற்றும் நன்கு பழக்கம் உடையவர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 01.13

ஒம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.